# அடிமைப்பெண் என்ற மறுமனையாட்டி

## (Concubine)

### அடிமைப்பெண் பற்றிய உண்மைகளை அறிந்துகொள்வோம்

1) துணைமை நிலையான மனைவி (Concubine) அல்லது மறுமனையாட்டி என்றால் என்ன ?

2) ஒரு ஆணின் வாழ்க்கையில் குறிப்பாக ஒரு மணமான ஆணின் வாழ்க்கையில், அவளுடைய அந்தஸ்து அல்லது சமுதாயப்படிநிலை என்ன?

3) ஆணுக்கு அவருடைய வாழ்க்கையில், அவருடைய சொத்தில், அவருடைய உயில், முதலியனவைகளில் இவ்வுறவு முறையில் பிறந்த குழந்தைகளின் அந்தஸ்து என்ன?

4) அவள் ஒரு முஸ்லிமாவாக இருக்கவேண்டியது அவசியமா, அல்லது, இவ்வுறவு முறையில் மதம் ஒரு பிரச்சினை இல்லையா?

5) நவீன கால பழக்க வழக்கங்களான வைப்பாட்டி / காமக்கிழத்தி / தாசி / விபச்சாரி ஆகியவைகளிலிருந்து இது எப்படி மாறுபட்டது?

---

ஒரு மிகவும் நம்பத்தகுந்த ஹதீத் விளக்குவதாவது : "உன் பற்களுக்கு இடையில் இருப்பதையும் (அதாவது, நாக்கு), மற்றும் உன் துடைகளுக்கு இடையில் இருப்பதையும் காத்துக்கொண்டால், நான் உனக்கு சொர்க்கத்தின் வாக்களிக்கின்றேன்."

ஸஹீஹ் புகாரியில் குறிப்பிட்டிருப்பதாவது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) வாலிபர்களுக்கு கற்றுக்கொடுக்கும் பொழுது, நீங்கள் கூறும் எவளையும் நான் உங்களுக்கு மணமுடித்து வைக்கின்றேன். ஆனால், விபச்சாரப்பாவத்தை செய்யாதீர்கள், என அறிவுறுத்தி வந்தார்.

---

இஸ்லாம் மதத்தில் அடிமைப்பெண் முறையை முதலில் பார்ப்போம்:

அல்லாஹ்வின் பெயரால் நாம் அவன் புகழ் பாடுகின்றோம், அவன் உதவியை நாடுகின்றோம், மேலும் அவனிடமே மன்னிப்பும் கேட்கின்றோம். அவன் நல்வழி நடத்தும் யாரையும் எவரும் வழி கெடுக்க முடியாது, அவன் வழி தவற அனுமதித்த யாரையும் எவரும் நேர்வழி காட்ட இயலாது. அல்லாஹ்வைத்தவிர மற்ற யாரும் (எந்த விக்ரகமும், எந்த மனிதனும், எந்த சமாதியும், எந்த இறை தூதரும், எந்த இமாமும், எந்த தாயும் (Dai - பிரச்சாரகர்), வேறு யாரும்) வணக்கத்திற்குரியவர் அல்ல என்பதை நாம் சாட்சியளிக்கின்றோம், மேலும், முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அல்லஹ்வின் அடியாராகவும், இறுதி இறைத்தூதர் எனவும் சாட்சியளிக்கின்றோம்.

பலபேர், அடிமைத்தனத்தின் முறையைப்பற்றி புரியாமல், முஸ்லிம்களுக்கு அது அவமானமாக நினைத்துக்கொண்டு, வெட்கப்பட்டு, அதை மூடி மறைத்து விடுவது சகஜம் தான். அப்படி ஏன் என்றால், 1400 வருடங்களுக்கு முன், அல்-குர்'ஆன் இறக்கப்பட்ட பொழுது இருந்த சமூக அமைப்பும், ஒழுக்க கோட்பாடுகளும் தற்காலத்தை ஒப்பிடுகையில் முற்றிலும் மாறுபட்டிருக்கின்றன. இன்றைய உலகில் எந்த இடத்திலும் இம்முறை பின்பற்றப்படவில்லை. ஆகவே, இம்முறையின் உண்மை நிலையை முற்றிலும் அறிந்து புரிந்து கொள்ள, நாம் அல்-குர்'ஆன் இறக்கப்பட்ட அக்காலத்தை கற்பனை செய்து காணவேண்டும்.

நினைவுக்கு எட்டாத தொன்றுதொட்ட காலம் முதல் அடிமைத்தனம் அல்லது அடிமைமுறை அனைவராலும் ஆமோதித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறையாக இருந்து வந்தது. ஆக, ஒரு காலும் அடிமைத்தனத்தை இஸ்லாம் ஆரம்பித்து வைக்கவில்லை. மாறாக, அடிமைத்தனத்தை ஒழிக்க அறிவுறுத்தி, வற்புறுத்தி, அடிமைகளின் விடுதலையைப்பற்றி மனங்களில் ஆழமாக பதியவைத்து, அடிமைகளை சம உரிமை பெறும் குடிமக்களாக வாழ வைக்க இஸ்லாம் தான் முதல் படி அமைத்தது. அதற்காக, இஸ்லாம் ஒரு ஒழுங்குமுறையை ஸ்தாபித்தது. இன்றைய நவீன சமுதாயத்தில் இருநூறு ஆண்டுகளாகத்தான் அடிமைத்தனம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. 1900 ஆண்டின் ஆரம்பத்தில் கூட அநேக இடங்களில், அடிமைத்தனம் கடைபிடிக்கப்பட்டு வந்தது. ஆனால், ஒரு அடிமையை விடுதலை செய்து, அவர்களை குடிமக்களுடன் சம உரிமை வழங்குவதை ஒரு புண்ணிய காரியமாக்கியது இஸ்லாமிய மதம் ஒன்றுதான். இது 1400 ஆண்டுகளுக்கு முந்தியே பிரகடனப்படுத்தப்பட்டுவிட்டது !

**ஆக, எப்படி மக்கள் (ஆண்களும் பெண்களும்) அடிமையாயினர்?**

ஒரு சுதந்திர மனிதனை அடிமையாக்க அக்காலத்தில் பல வழிகள் இருந்தன. ஏற்கனவே இருந்த அடிமைகளின் பிள்ளைகளும் அடிமைகளாகவே நடத்தப்பட்டன. சிலர், பிள்ளைகளை திருடி, அவர்களை மற்ற இடங்களில் அடிமையாக விற்று வந்தனர். ஒரு குலம் மற்றொரு குலத்தின் மீது படையெடுத்து தாக்கி, ஆண்

வம்சத்தினரை கொன்றுவிட்டு, அவர்களின் பெண்களையும், பிள்ளைகளையும் போரில் சூறையாடப்பட்ட யுத்த செல்வமாக பெற்று, அவர்களை அடிமையாக்கி வந்தனர்.

5000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக கூறிக்கொள்ளப்படும் ஸ்ம்ருதிகளின் மூலமும் மற்ற ஹிந்து மத சட்ட புத்தகங்களின் மூலமும் அடிமை முறை வேதகாலத்தில் ஒரு அங்கீகரிக்கப்பட்டு கடைபிடிக்கப்பட்ட பழக்கமாக இருந்ததை நாம் அறியலாம். ஆரியர்கள் தொடர்ந்து போர் புரிந்து வந்ததுடன் நில்லாமல், இந்தியர்களை விரோதிகளாக தாஸ்யூ, மற்றும் தாசா என ரிக் வேதத்தில் குறிப்பிட்டுள்ளனர். ஆரியர்களால் தோற்கடிக்கப்பட்ட பழங்குடியினர், தாசர்களாக அதாவது அடிமைகளாக ரிக் வேத ஆரியர்களால் வர்ணிக்கப்பட்டு, அவ்வாறே நடத்தப்பட்டன. வேதகால கடைசி கட்டத்தில், ஜமீந்தார்கள் தமது நிலங்களை சுத்ராக்களைக்கொண்டு உழுது வந்தனர். "மாஜிமா நிகாயா" என்ற புத்த இலக்கிய புத்தகம், அடிமைத்தனத்தை சமுதாயத்தின் ஒரு சாதாரண பழக்க வழக்கமாக சித்தரிக்கிறது. அவ்விலக்கிய புத்தகங்கள் தாசா என அழைக்கப்பட்டவர்கள் அப்பொழுது மனித மிருகங்களாக வர்ணிக்கப்பட்டு வந்ததை விவரிக்கின்றன.

ராமாயண காவியம் "குஹாகா சன்டாலாவின்" கதையை குறிப்பிடும் பொழுது, அவரை ஒரு சுத்ரா என வர்ணிக்கிறது. பிராமண சட்டங்கள் சுத்ராக்களை அடிமையாகத்தான் நடத்துகின்றன. போரில் பிடிபட்ட கைதிகள் அடிமையாக்கப்பட்டதாக அந்த மஹா காவியம் கூறுகிறது. "அர்த்த சாஸ்திரம்" என சொல்லப்படும் ஹிந்து வேத புத்தகத்திலும் அடிமைகளின் உரிமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

மோசஸ் (Moses - peace be upon him) காலத்திற்கு முன்பிருந்தே எகிப்து நாட்டை ஆண்டு வந்த ஃபிர்'அவுன் (Pharao) வம்சத்தினர், பனிஇஸ்ராயீல் (Bani Israel) வம்சத்தினரை அடிமைகளாக்கி கொடுமைப்படுத்தி வந்தது அனைவரும் அறிந்த சரித்திரமே.

நபி பெருமானர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பிறப்பிற்கு சுமார் 3500 வருடங்களுக்கு முன்பே "தல்முத்" என்ற யூத புனிதப்புத்தகத்திலும், 2000 வருடங்கள் முன் உதயமான பைபிளிலும் போரினால் கிடைக்கப்பெற்ற பொருள்களையும், கைதியாக்கப்பட்ட ஆண்களையும் பெண்களையும் பங்கிட்டுக்கொண்ட விதத்தை காணலாம்.

புனித பைபிளின் "எண்ணாகமம்" என சொல்லப்படும் , அதிகாரம் - 31, வசனங்கள் 1 முதல் 54 வரை (Old Testament - Numbers, chapter-31, Verses 1 to 54) வாசித்தீர்களானால், போருக்குப்பின் கைவந்த செல்வத்தை (மனிதர்கள், கால்நடைகள், பொன் வெள்ளி மற்றம் இதர பொருட்களை (தாங்கள் கொள்ளையிட்ட பொருளையும் தாங்கள்

பிடித்த நரஜீவன் மிருகஜீவன் அனைத்தையும் சேர்த்து) வென்றவர் பங்கிட்டுக்கொள்ளவேண்டிய முறை கீழ்கண்டவாறு தெள்ளத்தெளிவாக குறிக்கப்பட்டுள்ளதை அறியலாம்:

12. சிறைபிடிக்கப்பட்ட மனிதரையும், மிருகங்களையும், கொள்ளையிட்ட பொருள்களையும் எரிகோவின் அருகேயுள்ள யோர்தானுக்கு இக்கரையில் மோவாபின் சமனான வெளிகளிலுள்ள பாளயத்திலிருந்த மோசேயினிடத்துக்கும், (camp at the plains of Moab, which are by Jordan near Jericho) ஆசாரியனாகிய எலெயாசாரினிடத்துக்கும், (Eleazar the priest) இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்துக்கும் கொண்டுவந்தார்கள்.

13. மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் (Moses, and Eleazar the priest) சபையின் பிரபுக்கள் எல்லாரும் அவர்களைச் சந்திக்கப் பாளயத்திற்கு வெளியே புறப்பட்டுப்போனார்கள்.

14. அப்பொழுது மோசே யுத்தத்திலிருந்து வந்த ஆயிரம்பேருக்குத் தலைவரும், நூறுபேருக்குத் தலைவருமாகிய சேனாபதிகள்மேல் கோபங்கொண்டு,

15. அவர்களை நோக்கி: ஸ்திரீகள் எல்லாரையும் உயிரோடே விட்டுவிட்டீர்களா?

16. பேயோரின் சங்கதியிலே பிலேயாமின் ஆலோசனையினால் இஸ்ரவேல் புத்திரர் **கர்த்தருக்கு** விரோதமாய்த் துரோகம்பண்ணக் காரணமாயிருந்தவர்கள் இவர்கள்தானே; அதினால் **கர்த்தரின்** சபையிலே வாதையும் நேரிட்டதே.

17. ஆகையால் குழந்தைகளில் எல்லா ஆண்பிள்ளைகளையும், புருஷசம்யோகத்தை அறிந்த எல்லா ஸ்திரீகளையும் கொன்றுபோடுங்கள்.

18. ஸ்திரீகளில் புருஷசம்யோகத்தை அறியாத எல்லாப் பெண்பிள்ளைகளையும் உங்களுக்காக உயிரோடே வையுங்கள்.

மேலும் பங்கீட்டு முறைப்படி,

35. புருஷசம்யோகத்தை அறியாத ஸ்திரீகளில் முப்பத்தீராயிரம்பேர் இருந்தார்கள்.

36. யுத்தஞ்செய்யப் போனவர்களுக்குக் கிடைத்த பாதிப்பங்கின் தொகையாவது:

ஆடுகள் மூன்றுலட்சத்து முப்பத்தேழாயிரத்து ஐந்நூறு.

37. இந்த ஆடுகளிலே **கர்த்தருக்குப்** பகுதியாக வந்தது அறுநூற்று எழுபத்தைந்து.

38. மாடுகள் முப்பத்தாறாயிரம்; அவைகளில் **கர்த்தருக்குப்** பகுதியாக வந்தது எழுபத்திரண்டு.

39. கழுதைகள் முப்பதினாயிரத்து ஐந்நூறு; அவைகளில் **கர்த்தருக்குப்** பகுதியாக வந்தது அறுபத்தொன்று.

40. நரஜீவன்கள் பதினாறாயிரம் பேர்; அவர்களில் **கர்த்தருக்குப்** பகுதியாக வந்தவர்கள் முப்பத்திரண்டுபேர்.

(முழு விவரங்களுக்கு பைபிள் 31 - 1 முதல் 54 வரை, "**எண்ணாகமம்**" காண்க)

அடிமைத்தனத்தின் இச்செயல்முறை, உலகில் அனைத்து இடங்களிலும் கடைபிடிக்கப்பட்டு வந்தது. இந்தியாவிலும் ராஜகுமாரர்கள், போரில் வென்று, மற்ற இராஜ்ஜியத்தினரையும், ராஜ குமாரர்களையும் அடிமையாக்கி வந்த சரித்திரத்தை நாம் அறிவோம். ஆக, அடிமைத்தனத்தை இஸ்லாம் ஆரம்பிக்கவும் இல்லை, ஆதரிக்கவும் இல்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். உண்மையில் சொல்லப்போனால், ஒரு சுதந்திர மனிதன் அடிமையாக்கப்படும் அனைத்து கதவுகளையும் இஸ்லாம் அடைத்து விட்டதுடன், செயல்முறையில், அடிமையாக்கப்பட்டவர்களை விடுவித்து, பொறுப்புள்ள சுதந்திர குடிமக்களாக்கும் அனைத்து கதவுகளையும் இஸ்லாம் திறந்து விட்டது. இஸ்லாம் ஒன்றுதான், அடிமைத்தனத்தை ஒழித்து, அடிமைகளை சுதந்திர சமுதாயத்தின் ஒரு பங்காக்கும் செயலை ஒரு புண்ணிய காரியமாக்கி, அவ்வாறு செய்பவருக்கு அல்லாஹ்விடமிருந்து தக்க சன்மானம் கிடைக்கும் என போதிக்கிறது.

ஒரு சுதந்திரமான ஆணையோ, பெண்ணையோ, அல்லது ஒரு பிள்ளையையோ, கடத்தி அடிமையாக்குவதை ஒரு பாவமாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அறிவித்தார். போருக்குப்பின், இரு தரப்பினரும் சம்மதித்தால் போர்க்கைதிகளை பரிமாற்றம் செய்து வந்தார். அப்படியில்லை என்றால், கைதிகள் மீட்டுப்பணம் கொடுத்து, விடுதலை செய்யப்பட்டன. அதுமட்டுமின்றி, அநேக நேரங்களில், இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கருணையும் பெருந்தன்மையும் கொண்டு, எந்த மீட்புப்பணமும் இன்றி விடுதலை செய்து வந்தார். மேற் சொன்ன எதுவும் முடியாத பட்சத்திலும், பிடிபட்ட

கைதிகள் திரும்பிச்செல்ல இயலாத பொழுதும், அவர்கள் அடிமைகளாக்கப்பட்டு, அவர்களை இஸ்லாமிய சமுதாயத்தில், சுதந்திரமாக வாழ வழி செய்யப்பட்டு வந்தது.

பதர் போர்க்கைதிகள் தம்மை விடுவித்துக்கொள்ள பணமோ வேறு வழிவகையோ இல்லாமல் இருந்தனர். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், மீட்டுப்பணத்திற்கு பதில் அன்சார் குழந்தைகளை எழுத கற்றுக்கொடுக்கும்படி செய்தார்.

சில நிகழ்வுகளில், பகைவன் போர் புரிந்துகொண்டிருக்கும் பொழுது, போர்க்கைதிகளை விடுவித்தால், அவர் திரும்பிச்சென்று மீண்டும் முஸ்லிம்களை தாக்கக்கூடும் என்ற பயம் இருந்தது. அப்பேற்பட்ட சமயங்களில், அன்று இருந்த பழக்க வழக்கங்களின் படி, போர்க்கைதிகள், அடிமையாக கருதப்பட இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அனுமதித்தார். அவர்களை சிறையில் அடைப்பதற்கு பதில் வீடுகளில் தங்கச்செய்து, அவர்களை அடிமையாக பெற்றவர் அக்கைதியின் நலனுக்கு பொறுப்பாக்கப்பட்டனர். இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஈமான் கொண்டவர்களை அவர் உண்பதைப்போல் அடிமைக்கும் ஊட்டவும், அவர் உடுத்துவதைப்போல் அடிமைக்கும் உடுத்த கொடுக்கவும் வற்புறுத்தியும் அறிவுறுத்தியும் வந்தார்.

அவ்வாறு, போர்க்கைதிகளாக்கப்பட்ட பெண்களின் பிரச்சினை எழுந்தது. சில சமயம், அப்பெண்கள் போருக்குப்பின் பரிமாற்றப்படாமலும், மீட்கப்படாமலும் இருந்து, அவர்கள் திரும்பிச்செல்ல இடமே இல்லாமலும் ஆகிவிடுவதுண்டு. அநேக சமயங்களில் குலங்களுக்கு இடையில் போர் மூண்டதும் வெற்றி பெற்ற குலம் தோற்ற குலத்தை முற்றிலும் அழித்து விடும். அப்பொழுது, போர்க்கைதிகளை திரும்பச்செய்ய இடமே இருக்காது. ஆகவே, அவர்களை தன் வர்க்கத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டியதிருக்கும். அதன் படி, அந்த அடிமைப்பெண்களுடன் இரண்டு விதமான தேர்வுகள் தான் இருக்கும்.

ஒன்று, அவர்களை சமுதாயத்தில், தனியாக, எந்த குடும்பமும், பாதுகாப்பும் இல்லாமல் விட்டுவிடுவது, அல்லது இரண்டாவதாக, இருக்கும் ஏதாவது ஒரு குடும்பத்தின் பொறுப்பில் அவர்களை இணைத்து, பாதுகாப்பு கொடுப்பது.

தேர்வு 1 : இது ஒரு நல்ல தேர்வாக இருந்திருக்காது, ஏனெனில், ஒரு குடும்பத்தின் அல்லது, குலத்தின் பாதுகாப்பும் கவனிப்பும் இல்லாத ஒரு பெண், தன் வாழ்வாதாரத்திற்கு ஒழுக்கமற்ற செய்கைகளில் வீழக்கூடம். அவர்களின் வம்ச முறை அறியப்படாமல் இருப்பதால், அவர்களை எந்த கண்ணியமான ஆடவனும் மணந்து கொள்ள முன் வரமாட்டான். அத்துடன், அவ்வாறு ஒரு பெண்ணை, இனம் தெரியாத, ஒரு புது நாட்டில், குடும்பமின்றி, பாதுகாப்பின்றி, எந்த பொருளுமின்றி அப்படியே விட்டுவிடுவதும் சரியல்ல.

தேர்வு 2 : அவர்களை ஒரு குடும்பத்தின் பொறுப்பில் கொடுப்பது.

எந்த பெண்ணை யாருடைய பொறுப்பில் ஒப்படைக்கவேண்டும் என அரசு தான் தீர்மானிக்கும். அந்த அடிமைப்பெண்ணோ, அவளை பொறுப்பேற்கும் குடும்பமோ, நிர்ணயிக்க முடியாது. அரசால் அளிக்கப்பட்டதை அந்தக்குடும்பம் ஏற்றுக்கொள்ளும்.

இந்த முறைதான் அடிமைத்தனத்தை ஒழித்து, அடிமைகளை சமுதாயத்தில் ஒரு அந்தஸ்து வழங்கும் சிறந்த முறையாக கருதப்பட்டது. நாம் இந்த முறையை இன்றைய கால கட்டத்தில் பொருத்திப்பார்க்க எண்ணக்கூடாது, இது 1400 வருடங்களுக்கு முன், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) காலத்தை கருத்தில் கொண்டு நோக்க வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உடைய உன்னதமான சஹாபாக்களின் பயிற்சியும், ஒழுக்கக்கட்டுப்பாடும், புனித குர்'ஆன் மற்றும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உடைய வழிகாட்டலையும் கருத்தில் கொண்டு அக்காலத்திய நிலையை நோக்கவேண்டு.

## பதில்கள் :

**1) துணைமை நிலையான மனைவி (Concubine) அல்லது மறுமனையாட்டி என்றால் என்ன?**

ஒரு குடும்பத்திற்கு அரசால் ஒதுக்கப்பட்ட ஒரு அடிமைப்பெண், அக்குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டும் வாழ்க்கைத்துணைவியாவாள். அந்த ஒரு நபர் மட்டும் அவளுடன் உறவு கொள்ள அனுமதிக்கப்படுவார். அடிமைப்பெண்ணுக்கும், தன் சொந்த மனைவிக்கும் உள்ள வேறுபாடு யாதெனில், மனைவி, திருமண ஒப்பந்தப்படி (நிகாஹ்) வீட்டிற்குள் பிரவேசித்தவள், அடிமைப்பெண் அரசால் ஒதுக்கப்பட்டவள்.

**2) ஒரு ஆணின் வாழ்க்கையில் குறிப்பாக ஒரு மணமான ஆணின் வாழ்க்கையில், அவளுடைய அந்தஸ்து அல்லது சமுதாயப்படிநிலை என்ன?**

அடிமைப்பெண்ணுடைய அந்துஸ்து, அவள் ஒப்படைக்கப்பட்ட நபரின் மனைவியைப்போல் தான். யாருடைய பொறுப்பில் அவள் கொடுக்கப்பட்டாளோ, அந்த நபர் மட்டும் தான் அவளுடன் உறவு கொள்ள அனுமதிக்கப்பட்டது. ஒரு அடிமைப்பெண், ஒரு குடும்பத்தில் தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டால், அவர் சகோதர்களுக்கோ, அல்லது அவர் ஆண் பிள்ளைகளுக்கு அவள் மீது எந்த உரிமையும் கிடையாது.

**3) ஆணுக்கு அவருடைய வாழ்க்கையில், அவருடைய சொத்தில், அவருடைய உயில், முதலியனவைகளில் இவ்வுறவு முறையில் பிறந்த குழந்தைகளின் அந்தஸ்து என்ன?**

சட்டப்படி மணந்த மனைவியின் குழந்தைகளும் அடிமைப்பெண்ணின் குழந்தைகளும் சம உரிமையுடயவரே. அடிமையின் குழந்தைகளுக்கும் சரியாக மனைவியின் குழந்தைகளைப்போலவே அனைத்தும் கொடுக்கப்படவேண்டும். அடிமைப்பெண்ணின் குழந்தைகளுக்கும் சொத்துரிமை உண்டு. எந்த வேறுபாடும் அவர்களுக்குள் அறவே கிடையாது. ஒரு அடிமைப்பெண் தன் குழந்தையை பெற்றெடுத்தபின், அவளை வேறு யாருக்கும் விற்க இயலாது. இத்துடன் அவள் குடும்பத்தின் ஒரு நிரந்தர உறுப்பினராகி விடுவாள்.

4) **அவள் ஒரு முஸ்லிமாவாக இருக்கவேண்டியது அவசியமா, அல்லது, இவ்வுறவு முறையில் மதம் ஒரு பிரச்சினை இல்லையா?**

இல்லை, அடிமைப்பெண் ஒரு முஸ்லிமாவாக இருக்கவேண்டிய அவசியமில்லை. உண்மையில் சொல்லப்போனால், அனைத்து போர்களும் முஸ்லிம்களுக்கும் நம்பிக்கையற்றோருக்கும் இடையில் தான் நிகழ்ந்தன. இதனால், அநேகமான அடிமைப்பெண்கள், முஸ்லிம் அல்லாதவராக இருந்தனர். ஆனால், இந்த முறையினால் அவள் இஸ்லாமிய சூழ் நிலையில் இருக்க நேர்ந்ததால், அக்கால முஸ்லிம் மக்களின் நடத்தை மற்றும் ஒழுக்கத்தை கண்டு, தாமாகவே அப்பெண்கள் இஸ்லாம் மதத்தை தழுவிக்கொண்டனர். (இன்றைய உதாராணம் : இங்கிலாந்து நாட்டின் பெண் நிருபர் “யுவொன்னா ரிட்லி” (Yuvonne Ridley), ஆப்கானிஸ்தானில் தாலிபான் போராளிகளால் கைது செய்யப்பட்டு, விடுதலையடைந்த பின் தன் நாட்டிற்கு திரும்பி, அங்கே அவள் இஸ்லாம் மதத்தை தழுவி, இன்றும் முஸ்லிமாக வாழ்கிறாள். இங்கிலாந்து நாட்டின் மாஜி பிரதம மந்திரியான டோனி ப்லைர் (Tony Blair) உடைய மனைவியின் தங்கை, பாலஸ்தீன் காஸா, சென்று அங்குள்ள ஒழுக்கக்கட்டுப்பாட்டை அறிந்து வந்து இஸ்லாம் மதத்தை தழுவினாள்). கேரளத்தைச்சேர்ந்த கமலா தாஸ் என்ற புனைப்பெயர் கொண்ட பிரபல எழுத்தாளர் மாதவிகுட்டி தன் 65வது வயதில் இஸ்லாம் மதத்தை தழுவினார்.

5) **நவீன கால பழக்க வழக்கங்களான வைப்பாட்டி / காமக்கிழத்தி / தாசி / விபச்சாரி ஆகியவைகளிலிருந்து இது எப்படி மாறுபட்டது?**

அக்காலத்து அடிமைப்பெண்ணுக்கும் ஒரு வியாதியாக பரவியிருக்கும் இன்றைய விபச்சாரத்திற்கும் இடையில் மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது. அடிமைப்பெண் அக்காலத்தில் ஒரு சமூக பிரச்சினயாக இருந்து, இஸ்லாம் அந்த பிரச்சினையை தீர்க்காமல் இருந்திருந்தால், விபச்சாரம் பெருமளவில் தலை தூக்கியிருக்கும்.

விபச்சாரத்தில், பெண் தன் சேவையை பணம் கொடுக்க விரும்பும் யாவருக்கும் விற்கின்றாள். ஆனால் ஒரு அடிமைப்பெண்ணோ ஒரு குடும்பத்தின் முழு உறுப்பினராக எடுத்துக்கொள்ளப்படுகிறாள்.

விபச்சாரத்தில் ஒரு பெண் பல ஆடவருடன் உறவு கொள்கிறாள். ஆனால், ஒரு அடிமைப்பெண் அவள் பொறுப்பாளியுடன் மட்டும், கணவன் - மனைவி போல்

உறவுகொள்ள அனுமதிக்கப்படுகிறாள். ஒரே ஒரு வேறு பாடு என்னவெனில், மனைவி முறைப்படி மணமுடித்து பிரவேசிக்கின்றாள், ஆனால் அடிமைப்பெண் அரசால் ஒப்படைக்கப்படுகிறாள்.

விபச்சாரம் சட்டவிரோதமான சிற்றின்பத்தின் விளைவு ஆவதுடன் அல்லாஹ்வின் பார்வையில் பெரிய பாவமாக இருக்கிறது. அடிமைப்பெண்களின் ஒதுக்கீடு, அவர்களை யுத்தத்தினால் கிடைக்கப்பெற்று இஸ்லாமிய சமுதாயத்தில் கவுரவத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒரு காலப்பிரச்சினை.

விபச்சாரம் மற்றும் காமக்கிழத்தி முறை எந்த பொறுப்பையும் சார்ந்ததில்லை. ஒரு ஆணும் பெண்ணும் ஒரு முறை உறவு கொண்டு பிரிந்து விடுகின்றனர். ஆனால், ஒரு அடிமைப்பெண் ஒரு நபரின் பொறுப்பாகி, அவன் அவள் மீது செலவிடுகிறான், இருக்க இடம் தருகிறான், உணவளிக்கின்றான், உடுத்திவிடுகின்றான், அவள் குழந்தைகளை தன் குழந்தைகளுக்கு சமமாக வளர்க்கின்றான். விபச்சாரத்தில் பிறந்த குழந்தைகள், திருமணத்திற்கு வெளியே முறைகேடாக பிறந்ததாக கருதப்பட்டு, தந்தையின் பெயரோ, நிழலோ இல்லாமல் வளரும். ஒரு அடிமைப்பெண்ணின் குழந்தைகள், அவளை தன் பொறுப்பில் கொண்டவனின் மற்ற பிள்ளைகளுடன் வளர்ந்து, அவர்களுக்குண்டான அத்தனை, உரிமைகளும், சொத்து சுவாதீன உரிமைகளும் பெறுகின்றனர். அடிமைப்பெண் முறை அன்றைய இஸ்லாமிய சமுதாயத்தால் ஆதரிக்கப்பட்டு, மதிக்கப்பட்டு வந்தது. அடிமைப்பெண், அவனுடைய மனைவியைப்போலவும் அவளுடைய குழந்தைகள் அவனுடைய குழந்தைகளைப்போலவும் சமுதாயத்தின் மற்றவர்களால் மதிக்கப்பட்டனர். ஆனால், இன்றுவரை, எந்த மதமும், எந்த அறநெறி சமுதாயமும், எந்த அரசாங்கமும் விபச்சாரத்தையும் காமக்கிழத்தி முறையையும் ஏற்றுக்கொண்டு, மதித்ததில்லை. இது சமுதாயத்தின் மிகக்கொடிய நோய். இதை எந்த தார்மீக சமூகத்தினரும் ஒழித்துக்கட்டுவதில் இதுவரை வெற்றி காணவில்லை.

அடிமைத்தன முறையை இஸ்லாம் ஆரம்பிக்கவில்லை என மீண்டும் நினைவூட்டுகின்றேன். ஆனால், அது அன்றைய சமுதாயத்தில், தொன்று தொட்டு இருந்து வந்தது. இஸ்லாம் அடிமைகளை தன் அரவணையில் கொண்டு, சமுதாயத்தில் அவர்களுக்கு ஒரு மான, மரியாதையுடன் கொண்ட வாழ்க்கையை ஏற்படுத்தி, சமுதாயத்தின் மற்றவருடன் சமமாக வாழ வழி வகுத்தது. புதியதாக அடிமைகளை உண்டாக்கும் வழிமுறைகளின் கதவுகள் மூடப்பட்டு, பல விருப்பத்தேர்வுகள் கொடுக்கப்பட்டு, அடிமைகளை இஸ்லாமிய சமுதாயத்தின் ஒரு பகுதியாக்க வழி வகுக்கப்பட்டது. ஒரு அடிமையை விடுதலை செய்வது மிகப்பெரிய புண்ணிய செயலாகவும் அல்லாஹ் சுப்ஹானஹூதா'லாவின் பெரிய சன்மானத்திற்குரிய செயாலாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. கொலை, வாக்குறுதி மீறல், நோன்புகளை புறக்கணித்தல், ஆகிய பாவங்களுக்காக வருந்தி, பிராயசித்தம் தேடுவது, ஒரு அடிமையை விடுதலை செய்வதின் மூலம் கூடும் என மக்களை

அடிமைகளை விடுவிக்க தூண்டுதலாக இஸ்லாம் செயல்பட்டது. இவ்வகையில், இஸ்லாம் அடிமைகளின் விடுதலைக்கு சாதகமான சூழ்நிலையை உண்டாக்கி, அவர்களை இஸ்லாமிய சமுதாயத்தில் சரிசமமான இடத்தையும் அந்தஸ்தையும் வழங்கியது.

நாம் இந்த அடிமைப்பெண் பிரச்சினையை தனிமைப்படுத்தி பார்க்காமல், இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) காலத்தின் முழு இஸ்லாமிய சமுதாயத்தையும் கருத்தில் கொண்டு நோக்கவேண்டும். சஹாபாக்களின் பயிற்சி, ஒழுக்கம், நடத்தை, நன்நெறி ஆகியவை இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய நேர் பார்வையில் அவர்களுக்கு வழங்கப்பட்ட பாடங்களாலும் வழிகாட்டும் அறிவுறைகளாலும் பெறப்பட்ட பலன்களாகும். இறையச்சத்தின் (தக்வா) தகுதி நிலையும், உறுதியளிக்கப்பட்ட சொர்க்கத்தின் மீது இருந்த நேசமும் சஹாபாக்கிடையில் இருந்த நீதிமுறையும் அறநெறியும், பய பக்தியற்ற இக்காலத்துடன் சற்றும் ஒப்பிட்டு காண இயலாது.

இஸ்லாமிய முறையில் இருந்த அடிமைதனத்தை ஒருவர், இக்கால நவீன குடிபெயர்க்கும் மேற்கத்தியர்களால் கண்டவர்களை ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து சங்கிலியால் கட்டி, சித்திரவதை செய்து, கப்பல்கள் மூலம் தம் நாடுகளுக்கு கடத்தப்பட்டு, மிருகங்களை விட மோசமாக நடத்தப்பட்ட அடிமைகளுடன் ஒப்பிட முடியாது. இஸ்லாமிய காலத்து அடிமைகளில் மிகவும் போற்றி மதிக்கப்பட்டவர்களான ஹத்ரத் பிலால் (Hazrath Bilaal) (RA) (ரஜிஅல்லாஹுதா'லா அன்ஹு), ஹத்ரத் அம்மார் பின் யாஸர் (Hazrath Ammaar Bin Yaasar), (ரஜிஅல்லாஹுதா'லா அன்ஹு), ஹத்ரத் ஸல்மான் அல்-ஃபார்ஸி (Hazrath Salmaan Al-Faarsi) (ரஜிஅல்லாஹுதா'லா அன்ஹு), மற்றும் ஹத்ரத் ஜைத் பின் ஹாரிஸ் (Hazrath Zaid Bin Haaris) (ரஜிஅல்லாஹுதா'லா அன்ஹு) இருந்தனர். அவர்கள் அடைந்த உயர்வான அந்தஸ்துகள், இஸ்லாம் அடிமைகளை விடுவித்து அவர்களுக்கு அளித்த மரியாதைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஹத்ரத் ஜைத் பின் ஹாரிஸ் (ரஜிஅல்லாஹுதா'லா அன்ஹு) உடைய அந்தஸ்து எப்படியிருந்ததென்றால், சஹாபாக்களில் அவரை மட்டும் தான் அல்-குர்'ஆனில், அவர் பெயருடன் அல்லாஹ் குறிப்பிட்டான். அவ்வாறு, மேற்கத்திய நாடுகள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக கடைபிடித்து வந்த அடிமைத்தன முறைக்கும், இஸ்லாமிய அடிமைமுறைக்கும் மத்தியில் பூமிக்கும் வானத்திற்கும் உள்ள வித்தியாசம் போல் இருக்கிறது. இஸ்லாமிய சட்டங்கள் அடிமைத்தனத்தை ஒழிக்க இயற்றப்பட்டபொழுது, மற்ற மதத்தினரிடம் அடிமைத்தன முறை ஓங்கியிருந்தது.

ஆனால், பின்பு நாம் தொடர்ந்து மீண்டும் மீண்டும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) இடம் 13 மனைவியர் தவிர ஒன்று அல்லது இரண்டு அடைமைப்பெண்களும் இருந்ததாக படிக்கின்றோமே ?

அல்லாஹ்வின் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர் வாழ்க்கையில் மொத்தம் 11 மனைவியர் இருந்தனர், மேலும், எந்த குறிப்பிட்ட ஒரே நேரத்தில் இருந்த மனைவியர் ஒன்பது தான். அவருக்காக ஒதுக்கப்பட்ட அடிமைப்பெண்கள் அவருடைய மரியாதைக்குரிய மனைவியர் ஆயினர். அவர்கள் அனைவரும், அல்லாஹ்வினால் அல் குர்'ஆனில் முஸ்லிம்களின் தாயாக அறிவிக்கப்பட்டு நன்மதிப்பு பெற்றனர். அவர்களில் ஹத்ரத் சஃபிய்யா (Hazrath Safiyya) ஒரு யூத அடிமைப்பெண்ணாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்காக ஒதுக்கப்பட்டு, அவர் முஸ்லிமாக மாறி, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை மணந்துகொண்டார். அடுத்த அடிமைப்பெண்ணாக ஹத்ரத் ஜுவெய்ரியா (ர) (Hazrath Juvairiya) என்பவர் பனு ஹாரிஸ் குலத்திலிருந்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு அளிக்கப்பட்டு, அவரும் இஸ்லாம் மதத்தை தழுவி, மணம் புரிந்து கொண்டார். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) வசம் ஹத்ரத் மரிய கிப்தியா (Maria Kibtiya) மற்றும் ஹத்ரத் ரிஹானா (Hazrath Rihana) என்ற மேலும் இரண்டு அடிமைப்பெண்கள் இருந்தன. அல்லாஹ்வும், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மட்டும் அறிந்த காரணங்களால், அவர் இருவரையும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மணக்கவில்லை. ஆனால் அவர்கள் மற்ற மனைவியர்களுக்கு சமமாக அன்புடனும் மரியாதைகளுடனும் நடத்தப்பட்டன. இவர் இருவரும் மற்ற மனைவியர் போலவே, வேறு யாரையும் மணக்கவும் இல்லை. மேலும் அவர்கள் முஸ்லிம்களால், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மற்ற மனைவியருக்கு அளிக்கப்பட்ட அதே மரியாதையுடன் மதிக்கப்பட்டன.

அல்லாஹ் ஒருவன் தான் மூலசக்தியாகவும், அனைத்தையும் அறிந்தவனாகவும் இருக்கின்றான். எழுதப்பட்ட உண்மைகள் அனைத்தும் அல்லாஹ்வின் உதவியாலும் வழிகாட்டலாலுமே, தவறுகள் அனைத்தும் என்னைச்சார்ந்தது.

அல்லாஹ் அனைவரையும் நேர்வழியில் நடத்துவானாக.

ஆமீன்